சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்

**முன்னிலை :** முனைவர்.சி.உஷாராணி,

**ந.க.எண். 025650 /எச்1 /2020** **நாள். 19.04.2021**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மே 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு ஒத்தி வைப்பு – செய்முறைத் தேர்வு நடத்துதல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :** 1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு, செ.வெ.எண்.219, நாள்.18.04.2021
2. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.025650 /எச்1 /2020, நாள். 08.04.2021

–––

பார்வையில் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில், +2 மாணவர்களுக்கான தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மூலம் நடத்தப்படும் பொதுத்தேர்வு தள்ளி வைக்கப்படுகிறது எனவும், +2 மாணவர்களுக்காக தற்போது நடைபெற்று வரும் செயல்முறைத் தேர்வு (Practicals) மட்டும் ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 05.05.2021 முதல் 21.05.2021 மற்றும் 31.05.2021 ஆகிய நாட்களில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு ஒத்திவைக்கப்படுகிறது.

2. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு பின்னர் நடைபெறும் நாட்கள் குறித்த விவரம், தேர்வுகள் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னர் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் அறிவிக்கப்படும்.

3. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு ஒத்திவைக்கப்பட்ட விவரத்தினை தெரிவிக்குமாறும், தலைமையாசிரியர்கள் வாயிலாக பள்ளிகளில் பயிலும்

சம்பந்தப்பட்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்விவரத்தினை தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. தற்போது நடைபெற்று வரும் செய்முறைத் தேர்வு (Practical Examination) மட்டும் ஏற்கனவே திட்டமிட்டபடி, பார்வை 2ல் காணும் அரசு தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடத்தப்படவேண்டும் என்பதை அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தல் வேண்டும்

5. செய்முறைத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை ஏற்கனவே அரசு தேர்வுகள் இயக்ககத்தால் அறிவுறுத்தப்பட்ட நாட்களில் இணையதளத்தின் வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/-

அரசுத் தேர்வுகள் இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் (கல்வி), பாண்டிச்சேரி
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை –9
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
4. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை–6
5. இயக்குநர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6